# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.6.B

எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 1.6.10-12

## எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 1.6.10-12

10. 01.01.2018 அன்று கலைவாணியின் வங்கிக் கணக்கு இருப்பு ₹5000. அவர் சனவரியில் ₹2000 பணம் செலுத்தினார், பிப்ரவரியில் ₹700 பணம் எடுத்தார். மார்ச் மாதத்தில் ₹1000 செலுத்தி, ₹500 எடுத்திருந்தால் அவர் கணக்கில் 01.04.2018 அன்று உள்ள வங்கி இருப்பைக் காண்க.

| | எடுத்த தொகை | செலுத்திய தொகை | மொத்த இருப்பு |
|---|---|---|---|
| 01.01.2018 அன்று கலைவாணியின் வங்கிகணக்கு இருப்பு = | - | - | ₹5,000 |
| சனவரியில் செலுத்தப்பட்ட பணம் = | | ₹2,000 | ₹7,000 |
| பிப்ரவரியில் அவர் வங்கிகணக்கில் இருந்து எடுத்த பணம் = | ₹700 | - | ₹6,300 |
| மார்ச் மாதத்தில் அவர் வங்கிகணக்கில் செலுத்திய பணம் = | - | ₹1,000 | ₹7,300 |
| மார்ச் மாதத்தில் அவர் வங்கிகணக்கில் இருந்து எடுத்த பணம் = | ₹500 | - | ₹6,800 |
| 01.04.2018 அன்று கலைவாணியின் வங்கிகணக்கு இருப்பு = | | | ₹6,800 |

எனவே, 01.04.2018 அன்று கலைவாணியின் வங்கிக் கணக்கில் உள்ள அவரது மொத்த இருப்பு = ₹6,800 ஆகும்.

11. $x$ என்னும் பொருளின் விலை, ஒவ்வொரு வருடமும் ₹10 அதிகரிக்கிறது. $y$ என்னும் பொருளின் விலை, ஒவ்வொரு வருடமும் ₹15 குறைகிறது. 2018ஆம் ஆண்டில் $x$ இன் விலை ₹50 ஆகவும் $y$ இன் விலை ₹90 ஆகவும் இருந்தால், 2020 இல் எந்தப் பொருளின் விலை அதிகமானதாக இருக்கும்?

2018 -ல் $x$ -ன் விலை = ₹50

ஒவ்வொரு வருடமும் $x$ -ன் விலை ₹10 அதிகரிக்கிறது. இரண்டு வருடங்களில் $x$ -ன் விலையில் ஏற்படும் மாற்றம் } = ₹20

∴ 2020 -ல் அதாவது 2 வருடத்திற்குப் பின் $x$ -ன் விலை } = ₹50 + ₹20 = ₹70

2018 -ல் $y$ -ன் விலை = ₹90

ஒவ்வொரு வருடமும் $y$ -ன் விலை ₹15 குறைகிறது. இரண்டு வருடங்களில் $y$ -ன் விலையில் ஏற்படும் மாற்றம் } = ₹15 × 2 = ₹30

∴ 2020 -ல் அதாவது 2 வருடத்திற்குப் பின் $y$ -ன் விலை } = ₹90 - ₹30 = ₹60

எனவே, 2020 -ல் $x$ -ன் விலை அதிகமானதாக இருக்கும்.

12. பொருத்துக.

| | அ | ஆ |
|---|---|---|
| ① | 72, 108, என்னும் முழுக்களுக்கு, 72 + 108 என்பதும் முழுக்களே. | ② கூட்டலின் மீதான பெருக்கலின் பங்கீட்டுப் பண்பு |
| ② | 68, 25 மற்றும் 99 என்னும் மூன்று முழுக்களுக்கு 68 × (25 + 99) = (68 × 25) + (68 × 99) | ⑤ பெருக்கல் சமனி |
| ③ | 0 + (-138) = (-138) = (-138) + 0 | ④ பெருக்கலின் கீழ்ப் பரிமாற்றுப் பண்பு |
| ④ | (-5) மற்றும் 10 ஆகிய முழுக்களுக்கு (-5) × 10 = 10 × (-5) | ① கூட்டலின் கீழ் அடைவுப் பண்பு |
| ⑤ | 1 × (-1098) = (-1098) = (-1098) × 1 | ③ கூட்டல் சமனி |


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:34 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**